**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10032026-10039

Volume: 10

Issue: 3

Month: January

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 26.10.2025

Accepted: 25.12.2025

Published: 01.01.2026

Citation:
Barathkumar, R. "Is the Exclamation Mark Exclusive to Two Languages." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 3, 2026, pp. 66–70.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i3.10039

*Corresponding Author:
drtamilbarath@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Is the Exclamation Mark Exclusive to Two Languages

**Mr. R. Barathkumar**
*Assistant Professor, Department of Tamil, Faculty of Arts and Science*
*Dhanalakshmi Srinivasan University, Samayapuram, Tiruchirappalli*
*http://orcid.org/ 0009-0009-4097-7231*

**Abstract**

*It is widely known that humans evolved from apes. Similarly, the mosquito is a creature that evolved from an insect species known as 'Flie,' which appeared thousands of years ago. Scientific researchers suggest that when this insect first appeared, it may not have had the ability to fly or suck blood, but rather existed as a parasitic insect that leaped from one place to another. Studies indicate that there are currently around 3,500 species of mosquitoes in the world, and approximately 700,000 people die annually from mosquito bites. The Tamil grammatical work Tolkappiyam states that the sakara ukaram (the letter 'su') following a single short vowel occurs in only two words. This suggests that the mosquito as a creature likely did not exist during the time of Tolkappiyar. The word 'kosu' (mosquito) does not appear even once in ancient Tamil literature, medieval literature, or in the commentaries of scholars. Only in Kuruntokai does the word 'nulambu' appear in a single poem composed by Venkottranar. In other Dravidian languages such as Kannada, Telugu, and Malayalam, different words are used to refer to the mosquito. A comparative study of all these facts reveals that the mosquito is a creature that appeared much later in history, and that the mosquito is in fact the evolved form of the insect species known as 'nulambu,' having developed the ability to fly and suck blood over time.*

***Keywords:*** *Tolkappiyam, Murriyal Ukaram, Nulambu, Mosquito, Dravidian Languages, Ancient Tamil Literature*

**References**

1. Kannappa Mudaliar, Tamil Literary Dictionary, Central Book Depot, Triplicane, Chennai - 1957
2. Samiyanathaiyar, U.V. (Ed.), Kuruntokai, Dr. U.V. Swaminathaiyar Library, Chennai, Seventh Edition - 2017.
3. Tamil Dictionary - Android Application.
4. Vellaivapanar, K. (Ed.), Tolkappiyam - Nannool, Ezhutthathikaram, Book Series: 11, Maanavar Pathippagam, Chennai, Second Edition - 2014.

# உச்சகாரம் இருமொழிக்கு உரித்தா?

*திரு. ரா. பரத்குமார்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் அறிவியல் புலம்
தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதுஅனைவரும்அறிந்ததே.அதுபோலப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே தோன்றிய "Flie" என்னும் பூச்சியினத்திலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்த உயிரினமே கொசுவாகும். இக்கொசுக்களின் ஆண் இனம் தாவரங்களின் சாற்றைக் குடிக்கும்; பெண் இனம் உயிரினங்களின் குருதியைக் குடிக்கும். இப்பூச்சியினம் தோன்றிய காலத்தில் (தொடக்கத்தில்) பறக்கின்ற, இரத்தம் குடிக்கின்ற திறனுடன் இருந்திருக்காது என்றும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவிச்செல்லும் ஒட்டுண்ணிவகைப் பூச்சியாக இருந்திருக்கவேண்டும் என்றும் அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். உலகில் தற்போது 3,500 வகையான கொசுக்கள் இருப்பதாகவும் ஆண்டிற்குச் சுமார் 7,00,000 பேர் கொசுக்கடியால் உயிர்நீப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக்கொசுக்கள் சுமார் 2 கி.மீ. தூரம்வரை தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களின் உடல்சூடு, அவற்றின் வியர்வை, அவை சுவாசிப்பின்போது வெளியிடும் கார்பன்-டை-ஆக்சைடு (CO2) ஆகியவற்றை மோப்பம்பிடித்துத் தேடிச்சென்று கடிக்குமாம்.

## தனிக்குறிலையடுத்த சகர உகரம்

கொசு என்னும் சொல் தமிழ் இலக்கணப்படி முற்றியலுகரச் சொல்லாகும். அதாவது தனிக்குறிலைத்தொடர்ந்து சகர உகரம் ("சு" என்னும் எழுத்து) இடம்பெற்றுச் சொல்லாவது முற்றியலுகரம் (கொ+சு). இவ்வாறு தனிக்குறிலைத்தொடர்ந்து சகர உகரம் (சு) பழந்தமிழில் இருசொற்களில் மட்டுமே பயின்றுவந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர்,

**"உச்ச காரம் இருமொழிக் குரித்தே**
**(எழுத்து. 75)**

என்ற நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரையாசிரியர்கள் உசு (புழுவகை), முசு (குரங்குவகை) ஆகிய இருசொற்களை எடுத்துக்காட்டுக்களாகத்தருவர்.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலில் உரையெழுதிய இளம்பூரணர் இந்நூற்பாவை விளக்கும்போது "பசு" என்னும் முற்றியலுகரச் சொல்லை ஆரியம் கலந்த சொல் என்கிறார். திசு, சிசு ஆகியவையும் தற்காலத்தில் உருவான புதிய முற்றியலுகரச் சொற்கள். அதாவது திசு என்னும் முற்றியலுகரச் சொல் தற்காலத்தில் அறிவியல் வளர்ச்சியின் விளைவால் உருவான கலைச்சொல். சிசு என்னும் முற்றியலுகரச் சொல் தற்காலத்தில் குழந்தையைக் குறிக்க மருத்துவத்துறையில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் சொல். இவற்றைப்போல் கொசு என்பதும் முற்றியலுகரச் சொல்தானே; எனில் தொல்காப்பியர் காலத்தில் கொசு என்னும் உயிரினமே இல்லையா?

**பிற திராவிட மொழிகளில் கொசுவைக் குறிக்கும் சொற்கள்**

கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் கொசுவைக்குறிக்க முறையே சொள்ளை, தோமா, கொதுகு ஆகிய சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இச்சொற்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்ட இலக்கணத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது இம்மொழிகள் தமிழின் கிளைமொழிகள் அல்லது திராவிட மொழிக்குடும்பத்தைச்சேர்ந்த மொழிகள் என்பதும் தொல்காப்பியர் காலத்திலும் உரையாசிரியர்கள் காலத்திலும் கொசு என்னும் உயிரினம் பரிணாம வளர்ச்சியடையாத பூச்சியினமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் புலனாகும்.

**பழந்தமிழில் கொசு**

பழந்தமிழ் இலக்கியங்களில் ஓரிடத்தில் கூடக் கொசு என்னும் சொல் இடம்பெறவில்லை. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகையில் "நுளம்பு" (பா.86:5) என்னும் சொல் ஓரிடத்தில் மட்டும் பயின்றுவந்துள்ளது. இச்சொல் பழங்காலத்தில் பரிணாம வளர்ச்சியடையாத கொசுவாகிய பூச்சியினத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

வெண்கொற்றனார் பாடிய குறிஞ்சித் திணைப் பாடலில் தலைவி தனது தனிமைத் துயரைத் தன் தோழியிடம் கூறும்போது நுளம்பு என்னும் உயிரினத்தின் செயல்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிந்துசென்றுள்ளான் தலைவன். அதைத் தலைவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவளுக்குத் தூக்கமும் வரவில்லை. தன்னுடன் இருக்கும் தோழியிடம் தலைவனது பிரிவைப்பற்றிக் கூறிப் புலம்புகிறாள். தலைவியின் வீட்டிற்கு அருகில் எருது கட்டப்பட்டிருக்கிறது. அதன் முகத்தில் நுளம்பு ஒன்று வந்து அமர்கிறது. அதன் தொந்தரவு தாங்காத எருது தலையை ஆட்டுகிறது. அப்போது நுளம்பு தாவிச் சென்று விடுகிறது. ஆனால் சற்று நேரத்திற்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் எருதின் முகத்தில் அந்நுளம்பு தாவித்தாவிவந்து அமர்வதால் எருதும் மீண்டும் மீண்டும் தலையை ஆட்டிக்கொண்டே இருக்கிறது. எருது தலையை ஆட்டும்போதெல்லாம் அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணி ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அதன் மெல்லிய ஓசை தலைவியின் தனிமைத் துயரை மிகுவிக்கிறது. தலைவனோடு சேர்ந்திருக்கவேண்டிய இந்தக்குளிர்காலத்து நள்ளிரவில் எருதின் மணியோசையைக் கேட்டுக்கொண்டிருப்பவர் என்னைத்தவிர வேறு யாரேனும் உளரோ? என்று தலைவி தன் தோழியிடம் வினவிப் புலம்புகிறாள்.

**"சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்**
**பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்**
**பிறருங் கேட்குந ருளர்கொ லுறைசிறந்**
**தூதை தூற்றுங் கூதிர் யாமத்**
**தானுளம் புலம்புதொ றுளம்பும்**
**நாநவில் கொடுமணி நல்கூர் குரலே"**

**(குறுந்.86)**

இப்பாடலில் தலைவியின் தனிமைத்துயரின் மிகுதியைக் குறிப்பிடவந்த புலவர் அம்மிகுதிக்குக் காரணமான மணியோசையை மட்டும் குறிப்பிடாமல் மணியோசைக்குக் காரணமான நுளம்பையும் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களுள் வெண்கொற்றனார் பாடிய பாடலாக இந்த ஒரு பாடல் மட்டுமே கிடைத்துள்ளது என்பதும் இந்த ஒரு பாடலில் மட்டுமே "நுளம்பு" என்னும் சொல் இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள "நுளம்பு" என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் "ஈ" என்றே பொருளுரைத்துள்ளனர். குறுந்தொகைக்கு உரை எழுதிய உ.வே. சாமிநாதையர் அந்நூலின் ஆராய்ச்சி முன்னுரையில், நுளம்பென்பது மாட்டீயின் பெயர். "ஆனுளம்பு" என இந்நூலுட்

கூறப்படுகின்றது. இவ்வீ இரவிலே பசுக்க ளைக் கடித்துத் துன்புறுத்தும் (ப.துடிடி) என்று விளக்கியுள்ளார்.

### ஈ, கொசு - வேறுபாடு

ஈக்கள் இரவில் எங்கும் பறந்துதிரியா. அவை பறந்து திரிவதும் பிற உயிரினங்களின் மீது அமர்ந்து, அவற்றைத் துன்புறுத்துவதும் பகலில்தான். ஆனால் கொசுக்கள் பகலைவிட, இரவில்தான் அதிகமாகப் பறந்து திரியும். மேலும் பிற உயிரினங்களின் மீது அமர்ந்தும் அவற்றைக் கடித்தும் துன்புறுத்தும்.

“ஈ” என்னும் ஒரெழுத்து ஒருமொழிக்கு, ஈ, தேனீ, வண்டு, சி றகு, அழிவு, கொடு (ப.56) எனப் பல்வேறு பொருண்மைகள் இருப்பதைத் தமிழ் இலக்கிய அகராதிவழி அறியமுடிகிறது. “நுளம்பு” என்னும் சொல்லுக்கு, சிறுகொசு, பெருங்கொசு (Android Application) என்னும் இருபொருண்மைகள் இருப்பதையும் “கொசு எனினும் கொதுகு எனினும் ஒன்றே” (மேலது) என்பதையும் தமிழ் அகராதி காட்டுகிறது. இவற்றால் நுளம்பு ஈயிலிருந்து வேறுபட்டது என்பதும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள நுளம்பு என்னும் சொல் ஈயைக் குறிக்காது என்பதும் புலனாகின்றன.

கொசுகு என்னும் சொல்லைப் பழந்தமிழ்ச்சொல் என்பாரும் உளர். ஆனால் செவ்விலக்கியங்களில் இச்சொல் ஓரிடத்தில்கூட இடம்பெறவில்லை.

கொசுவைக் குறிக்கும் வட் டாரவழக்குச் சொற்கள் சில

- தமிழ்நாட்டின் கொங்குவட்டார மக்களுள் சிலர், கொசுவைச் “சுள்ளான்” என்றும் “சூளான்” (கன்னடத்தையொட்டி) என்றும் குறிப்பிடுகின்றனர்.
- தமிழ்நாட்டின் ஓரிரு பகுதிகளில் கொசுவைச் “சீக்காடை” என்றும் கூறுகின்றனர்.
- இன்றும் இலங்கைத் தமிழர்கள் கொசுவைக்குறிக்கப் பழந்தமிழ்ச் சொல்லாகிய “நுளம்பு” என்பதையே பயன்படுத்திவருகின்றனர்.

### முடிவுரை

தனிக்குறிலைத் தொடர்ந்து சகர உகரம் (சு) இருசொற்களில் மட்டுமே பயின்று வரும் என்கிறது தொல்காப்பியம். இதனால் தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தில் கொசு இருந்திருக்க வாய்ப்பில்லை. பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாது இடைக்கால இலக்கியங்களிலும் உரையாசிரியர்களது உரைகளிலும் கொசு என்னும் சொல் ஓரிடத்தில்கூட இடம்பெறவில்லை. குறுந்தொகையில் மட்டுமே நுளம்பு என்னும் சொல் ஓரிடத்தில் பயின்றுவந்துள்ளது. அப்பாடலை எழுதிய பழங்காலப் புலவராகிய வெண்கொற்றனார் இலங்கைப் பகுதியில் வாழ்ந்தவரா என்பது மேலாய்விற்குரியது. தமிழ்நாட்டின் சில வட்டாரங்களில் கொசுவை வெவ்வேறு பெயர்களில் மக்கள் குறிக்கின்றனர். மேலும் கொசு என்னும் உயிரினம் காலந்தோறும் பரிணாம வளர்ச்சியடைந்துவந்திருப்பதை அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. பிற திராவிட மொழிகளில் கொசுவுக்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளன. இவற்றை ஒப்பிடும்போது கொசு என்னும் உயிரினம் மிகப் பிற்காலத்தில் தோன்றியதே என்பதும் நுளம்பு என்னும் பூச்சியினத்தின் பரிணாம வளர்ச்சியடைந்த (பறக்கின்ற, இரத்தம் குடிக்கின்ற திறனுடன் இருக்கும்) உயிரினமே கொசு என்பதும் புலனாகின்றன.

### துணைநூற்பட்டியல்

1. கண்ணப்ப முதலியார், தமிழ் இலக்கிய அகராதி, ஸெண்டரல் புக் டிப்போ, திருவல்லிக்கணி, சென்னை - 1957.

2. சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.), குறுந்தொகை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, ஏழாம் பதிப்பு - 2017.
3. தமிழ் அகராதி - Android Application.
4. வெள்ளைவாரணார், க. (உ.ஆ.), தொல்காப்பியம் - நன்னூல், எழுத்ததிகாரம், நூல்வரிசை: 11, மாணவர் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2014.